# Australian Early Development Census (AEDC)

## Frequently asked questions for families

# ‘ஆரம்பகாலக் குழந்தைப்பருவ வளர்ச்சி குறித்த ஆஸ்திரேலியக் கணக்கெடுப்பு’

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் - குடும்பத்தினர்களுக்கானவை

### ‘ஆரம்பகாலக் குழந்தைப்பருவ வளர்ச்சி குறித்த ஆஸ்திரேலியக் கணக்கெடுப்பு’ (Australian Early Development Census (AEDC)) என்பது யாது?

AEDC என்பது, பாடசாலைக் கல்வியைத் துவங்கும் நேரத்தில் ஆஸ்திரேலியாவிலுள்ள குழந்தைகள் எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளனர் என்பதைக் காண்பிக்கும் பொதுசன அடிப்படையிலான ஒரு அளவீடு ஆகும். தமது வகுப்பில் படிக்கும் ஒவ்வொரு குழந்தைக்குமென ஆய்வு முறைமை ஒன்றை ஆசிரியர்கள் பூர்த்தி செய்வார்கள். இந்த முறைமையானது, ‘ஆரம்பகாலக் குழந்தைப்பருவ வளர்ச்சி அளவீட்டு வினாத்தொகுப்பு’ (Early Development Instrument (Instrument)) எனும் ஆவணத்தின் ஆஸ்திரேலியப் பதிப்புரு ஆகும். ஆரம்பகாலக் குழந்தைப்பருவ வளர்ச்சியில் அடங்கியுள்ள ஐந்து முக்கியமான பகுதிகளை இந்த Instrument (வினாத்தொகுப்பு ஆவணம்) அளவீடு செய்யும்.

- உடல்ரீதியான ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு
- சமூகத் திறன்கள்
- உணர்வுபூர்வ முதிர்ச்சி
- மொழி மற்றும் அறிந்துணர் திறன்கள் (பாடசாலை அடிப்படையிலானது)
- தொடர்பாடல் திறன்கள் மற்றும் பொது அறிவு.

வயதுவந்த பிறகு ஒருவர் பெற்றிருக்கும் உடல்நலம், கல்வியறிவு மற்றும் சமூகரீதியான திறன்கள் ஆகியன எப்படி இருக்கும் என்பதை முன்கூட்டியே காண்பிக்கும் அறிகுறிகளோடு இந்தப் பகுதிகள் நெருக்கமான தொடர்புடையனவாகும்.

AEDC -கணக்கெடுப்பானது ஆஸ்திரேலியாவில் ஆரம்பகால குழந்தைப்பருவ வளர்ச்சியை அளவிடுதற்கான ‘தேசிய குழந்தை-வளர்ச்சி அளவீட்டு-முறை’யாகும் என்று ஆஸ்திரேலிய அரசாங்கம் ஆதரவுக்-கருத்து வெளியிட்டுள்ளது.

### AEDC-யை நடத்துவது யாருடைய பொறுப்பு?

ஆஸ்திரேலிய அரசாங்கமும், மாநில மற்றும் எல்லைப்பகுதி அரசாங்கங்களும் பல்வேறுபட்ட அமைப்புகளுடன் இணைவாகச் செயலாற்றி AEDC கணக்கெடுப்புத் திட்டத்தினை வழங்குகின்றன. மெல்பர்ன் நகரில் உள்ள ‘சமூக ஆராய்ச்சி மையம்’ (Social Research Centre) AEDC-யினது தரவுகளைத் திரட்டி அவற்றை நிர்வகிக்கும்.

### AEDC தரவுகள் ஏன் திரட்டப்படுகின்றன?

பாடசாலைகள், சமூகங்கள் மற்றும் அரசாங்கங்களுக்குத் தேவைப்படும் தகவல்களை AEDC கணக்கெடுப்பு அளிக்கிறது என்பதே இதன் பெறுமதியாகும். ஆஸ்திரேலியாவிலுள்ள குழந்தைகளின் எதிர்காலம் மற்றும் பொதுநலத்தினை வடிவமைக்கக் குழந்தைகளுக்கும், குடும்பங்களுக்கும் தேவைப்படும் சேவைகள், மூலவளங்கள் மற்றும் ஆதரவுதவிகளை அடையாளம் காண இந்தத் தகவல்கள் உதவும்.

குழந்தைகளுக்கு அவர்களுடைய வாழ்க்கையில் கிடைக்கும் வாய்ப்புக்களை அபிவிருத்தி செய்யும் வகையில் உள்ளூர்ப்பகுதி சூழல்களை எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்பதை விளங்கிக்கொள்ள சமூகங்களில் குழந்தைகளது வளர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களைக் கண்காணிப்பதற்காகவும் AEDC கணக்கெடுப்பு பயன்படுத்தப்படலாம்.

### AEDC-யின் தரவுகள் எவ்வாறு சேகரிக்கப்படுகின்றன?

பாதுகாப்பானதொரு தரவு சேமிப்பு முறையைப் பயன்படுத்தி, தமது முழு-நேரப் பாடசாலைக் கல்வியின் முதலாம் ஆண்டில் பயிலும் குழந்தைகளுக்கான ‘ஆரம்பகாலக் குழந்தைப்பருவ வளர்ச்சி அளவீட்டு ஆவணம்’ (Early Development Instrument (Instrument))-இன் ஆஸ்திரேலியப் பதிப்புரு ஒன்றினை ஆசிரியர்கள் பூர்த்தி செய்வார்கள் (இது ஒரு வினாத்தொகுப்பினைப் போன்றதாக இருக்கும்). தமது வகுப்பில் படிக்கும் குழந்தைகளை அவதானித்து அறிந்துகொண்டுள்ள விடயங்களின் அடிப்படையில் இந்த Instrument (வினாத்தொகுப்பு) ஆசிரியர்களால் பூர்த்தி செய்யப்படும். ஆசிரியர்கள் இதைப் பூர்த்தி செய்யும் வேளையில் குழந்தைகள் சமூகமாக வேண்டிய அவசியமில்லை. ஆசிரியர்கள் இதனைப் பூரணப்படுத்தும் நேரத்திற்கான ஆள்மாற்று உதவிக்காக பாடசாலைகளுக்கு நிதியுதவி அளிக்கப்படும் – ஒவ்வொரு மாணவ-மாணவியுடைய Instrument (வினாத்தொகுப்பு)-ஐயும் பூர்த்தி செய்ய ஆசிரியர்களுக்கு ஏறத்தாழ 20 நிமிடங்கள் ஆகும்.

‘டோரிஸ் நீரிணைத் தீவகக் குழந்தை ஒன்றின் Instrument (வினாத்தொகுப்பு)-ஐ ஆசிரியர் பூர்த்தி செய்யும்போது, இயலுமான தருணங்களில், ‘டோரிஸ் நீரிணைத் தீவக கலாசார ஆலோசகர்’ ஒருவருடன் அவர் கலந்தாலோசிக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது. ‘டோரிஸ் நீரிணைத் தீவகக் குழந்தைகளின் கற்றல் மற்றும் நடத்தைமுறைகளைப் பற்றி ‘டோரிஸ் நீரிணைத் தீவக கலாசார ஆலோசகர்’களுக்கு இருக்கும் கலாசார அறிவு மற்றும் சொந்தப் புரிதல் காரணமாக, ஆசிரியர்கள் இந்த வினாத்தொகுப்பினைப் பூர்த்தி செய்யும்போது அவர்களால் ஆசிரியர்களுக்கு உதவ இயலும்.

### என்னுடைய குழந்தைக்கான AEDC-யை என்னுடைய குழந்தையின் ஆசிரியர் பூர்த்தி செய்ய வேண்டியிருக்குமா?

AEDC கணக்கெடுப்பு என்பது, தேசிய அளவில் பூர்த்தி செய்யப்படும் ஒரு முக்கியமான ‘ஆரம்பகாலக் குழந்தைப்பருவ வளர்ச்சி’ குறித்த கணக்கெடுப்பு ஆகும். 2018-ஆம் அண்டில் பாடசாலைக் கல்வியின் முதல் ஆண்டில் படிக்கும் ஏறத்தாழ 309,000 குழந்தைகளைப் பற்றிய தகவல்கள் திரட்டப்பட்டன. இந்தக் கணக்கெடுப்பு பூர்த்தியானதும், குழந்தைகளுக்குத் தேவைப்படும் சேவைகள், மூலவளங்கள் மற்றும் ஆதரவுதவிகளை இன்னும் செயலூக்கமான முறையில் ஒதுக்குவதற்காக, சமூகத்தினர், பெற்றோர்கள், பாடசாலைகள் மற்றும் அரசாங்கங்களுக்கு AEDC-யானது இத் தகவல்களை அளிக்கும்.

குழந்தைகள் செழிப்பாய் வளர இயலும் வகையில் பாதுகாப்பும் பராமரிப்பும் மிக்க கற்றல் சூழல் ஒன்று அவர்களுக்கு அளிக்கப்படுவதை உறுதிசெய்யும் நோக்கத்தில் ஆரம்பகாலக் குழந்தைப் பருவத் திட்டங்களும் கொள்கைகளும் வடிவமைக்கப்படவும் செயல்படுத்தப்படவும் AEDC கணக்கெடுப்பு முடிவுகள் உதவுகின்றன. குழந்தைகளுடைய வாழ்க்கையின் ஆரம்பகால ஆண்டுகளில் அவர்களுக்கு உதவும் பொருட்டு மூலவளங்களில் முதலீடு செய்வதானது குழந்தைகளுக்கும், சமூகத்தினருக்கும் நீண்டகாலப் பலன்களை அளிக்கும். AEDC -யில் பங்குபற்றுவது சுயவிருப்பாகும், இது ஒரு சோதனை அல்ல, மற்றும் இது பூர்த்திசெய்யப்படும் வேளையில் குழந்தை சமூகமளிக்க வேண்டிய தேவையில்லை. தமது அவதானிப்புகளை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்கள் இந்த Instrument (வினாத்தொகுப்பு)-ஐப் பூர்த்தி செய்வர், அத்துடன் குழந்தைகள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைகளின் அந்தரங்கத்தன்மை பாதுகாக்கப்படும் வகையில் முடிவுகள் ஒன்றுபடுத்தப்படும். தரவுகளிலோ, அறிக்கைகளிலோ உங்கள் குழந்தை தனிப்பட்ட முறையில் அடையாளப்படுத்தப்படாது.

ஒவ்வொரு AEDC தரவுத் திரட்டலும் துவங்குவதற்கு முன்பாக, அவர்களுடைய குழந்தையின் பாடசாலை இதில் பங்குபற்றப் போகிறதா என்று தெரிவிக்கும் கடிதம் ஒன்று பெற்றோர்கள்/பராமரிப்பாளர்களுக்குக் கொடுக்கப்படும். தமது குழந்தைக்கான AEDC-யை ஆசிரியர் பூர்த்திசெய்ய வேண்டாம் என்று பெற்றோர்கள்/பராமரிப்பாளர்கள் விரும்பினால் அவர்கள் அதைப் பாடசாலைக்குத் தெரிவிக்கலாம்.

## தரவுத்-தளத்திலிருந்து என்னுடைய குழந்தையின் வினாத்தொகுப்பு முடிவுகளை என்னால் நீக்க இயலுமா?

ஆம். AEDC- கணக்கெடுப்பில் உங்கள் குழந்தையின் பங்கேற்பினை நீங்கள் எவ்வொரு சமயத்திலும் மீளப் பெறும் தெரிவினை நீங்கள் மேற்கொள்ளலாம். உங்களுடைய சம்மதத்தினை நீங்கள் மீளப் பெற்றால், தரவுத்-தளத்திலுள்ள திரட்டலிலிருந்து உங்கள் குழந்தையைப் பற்றிய தகவல்கள் நீக்கப்படும். உங்கள் குழந்தையின் பாடசாலையுடன் தொடர்புகொண்டு நீங்கள் இதைச் செய்யலாம். எனினும், தரவுகள் அறிவிக்கப்பட்டுவிட்ட பிறகு, நீங்கள் உங்களுடைய சம்மதத்தினை மீளப் பெறுவீர்களேயானால், உங்களது குழந்தையைப் பற்றிய தகவல்களை நீக்க இயலாது.

## என்னுடைய குழந்தையைப் பற்றிய தகவல்கள் பாதுகாப்பாக வைக்கப்படுமா?

ஆம். 'கல்வி, திறன்கள், மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம்' (Department of Education, Skills and Employment (DESE)) AEDC தரவுகளின் காப்பாளராக செயல்படுகிறது. அத்துடன் AEDC தரவுகளின் நம்பகத்தன்மையையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் இருப்பு-வைப்பு மற்றும் அறிவிப்பு குறித்த தொழில்-நுட்பங்களையும், தரவு சேகரிப்புத் தொழில் நுட்பங்களையும் இந்தத் திணைக்களம் நிர்வகிக்கிறது. DESE-யிற்கும் மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான சேவை வழங்குநர்களுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு விதிமுறைகள், AEDC-யின் தரவுகளை அனுமதியின்றி அணுகுதல், அவற்றின் எதிர்பாரா அழிவு மற்றும் அவற்றில் மாற்றம் ஏற்படுத்துதல் ஆகியவற்றிலிருந்து இந்தத் தரவுகளைப் பாதுகாக்கவேண்டிய அவசியத்தை வேண்டுகின்றன.

## என்னுடைய குழந்தையைப் பற்றிய தகவல்களின் பாதுகாப்பு குறித்து எனக்கு இன்னும் கேள்விகள் இருந்தால், அல்லது முறைப்பாடு ஒன்றை நான் செய்ய விரும்பினால் நான் யாருடன் தொடர்புகொள்வது?

AEDC தகவல்களின் பாதுகாப்பு குறித்த விசாரிப்புகளும், முறைப்பாடுகளும் எழுத்து மூலமாக aedc@education.gov.au எனும் மின்னஞ்சல் முகவரியில் DESE -யிற்கு அனுப்பப்பட வேண்டும். AEDC கணக்கெடுப்பின் முன்னெடுப்பைப் பற்றிய பல வகையான தகவல்கள் www.aedc.gov.au எனும் AEDC-யினரது வலைத்தலத்தில் உள்ளன.

DESE-யினரது வலைத்தலம் பின்வரும் தகவல்களை உள்ளடக்கியிருக்கும்:

- DESE அந்தரங்கத் தகவல் பதுகாப்புக் கொள்கை
- 'ஆஸ்திரேலிய அந்தரங்கத் தகவல் பாதுகாப்புக் கொள்கைகள்' (Australian Privacy Principles (APP))-இற்கு இணக்கமாக DESE எவ்வாறு நடந்துகொள்கிறது என்பதைப் பற்றிய தகவல்கள்
- சந்தேகிக்கப்படும் அந்தரங்கத்தன்மை மீறல் ஒன்றைப் பற்றிய முறைப்பாடுகள் எவ்வாறு செய்யப்படலாம்
- முறைப்பாடுகளை DESE கையாளும் விதத்தைப் பற்றிய சுருக்கம் ஒன்று.

## இந்த ஆஸ்திரேலியப் பதிப்புரு Instrument (வினாத்தொகுப்பு)-ஐ ஆசிரியர் பூர்த்தி செய்யும்போது குழந்தை சமூகமளிக்க வேண்டுமா?

இல்லை. பாதுகாப்பான தரவு சேகரிப்பு முறைமை ஒன்றைப் பயன்படுத்தி இந்த Instrument -(வினாத்தொகுப்பு)'இன் ஆஸ்திரேலிய பதிப்புருவினை ஆசிரியர்கள் பூர்த்தி செய்வர். வகுப்பில் குழந்தைகளை அவதானித்து அவர்களைப் பற்றி ஆசிரியர்கள் அறிந்துள்ள விடயங்களின் அடிப்படையில் இந்தக் கேள்விகள் பூர்த்தி செய்யப்படும். இது ஒரு சோதனை அல்ல, மற்றும் கேள்விகளை ஆசிரியர்கள் பூர்த்தி செய்யும்போது குழந்தைகள் உடன் இருக்கவேண்டிய அவசியம் இல்லை.

## ஆசிரியர்களுடைய அறிக்கைகள் எந்த அளவிற்கு நம்பககரமானவை?

ஆசிரியர்களுடைய அறிக்கைகள் மிகவும் நம்பககரமானவை. ஆசிரியர்களது தொழில் ரீதியான வல்லமையையும், குழந்தைகளைப் பற்றி அவர்கள் அறிந்துள்ள விடயங்களையும் வைத்துப் பார்க்கும்போது குழந்தைகளுடைய வளர்ச்சியைப் பற்றிய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு மிகவும் ஏற்றவர்கள் ஆசிரியர்களே என்பதை இது குறிக்கும்.

குறித்த அதே குழந்தைகளைப் பற்றிய அறிக்கைகளை ஏற்படுத்த வெவ்வேறு ஆசிரியர்களைப் பயன்படுத்தும் முறையின் நம்பகத்தன்மையை கனடா நாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

இந்த –(வினாத்தொகுப்பு) Instrument -ஐ துல்லியமாகப் பூர்த்தி செய்ய உதவுவதற்காக ஆசிரியர்களுக்கு விலாவரியான வழிகாட்டி ஒன்று கொடுக்கப்படும், மற்றும் ஒரு மணி நேரத்திற்கான பயிற்சியும் அவர்களுக்கு அளிக்கப்படும்.

ஆரம்பகாலக் குழந்தைப்பருவ வளர்ச்சியைப் பற்றிய புரிதலைக் கொண்டுள்ள அதியுயர் திறன் வாய்ந்த தொழில்-வல்லுநர்களாவர் ஆசிரியர்கள். ஆகவே, குழந்தைகளின் வளர்ச்சியைப் பற்றி அவதானிக்க இவர்கள் மிகவும் ஏற்றவர்களாவர்.

## பெற்றோர்கள்/பராமரிப்பாளர்களுக்கு அவர்களுடைய குழந்தையின் தனிப்பட்ட முடிவுகள் கிடைக்குமா?

AEDC என்பது பெற்றோர்கள்/பராமரிப்பாளர்களுக்கு அவர்களுடைய பிள்ளைகளைப் பற்றிய தனிப்பட்ட முடிவுகளை அளிக்கும் 'தேசிய எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு மதிப்பீட்டுத் திட்ட' (National Assessment Program in Literacy and Numeracy (NAPLAN)) த்தினைப் போன்றதல்ல. AEDC- கணக்கெடுப்பில் உங்கள் குழந்தை வசிக்கும் சமூகத்திலுள்ள மற்ற குழந்தைகளிடமிருந்து பெறப்பட்ட தரவுகளோடு உங்களுடைய குழந்தையைப் பற்றிய தரவுகள் ஒன்று சேர்க்கப்படும். தனிப்பட்ட குழந்தைகளுக்கான முடிவுகள் அறிவிக்கப்படுவதில்லை, மற்றும் AEDC கணக்கெடுப்பு என்பது தனியொரு குழந்தையைப் பற்றி அறிந்துகொள்வதற்கான சாதனம் அல்ல. தனியொரு குழந்தையைப் பற்றிய அறிக்கை தயார் செய்யப்படுவதில்லை என்பதை இது குறிக்கும்.

உங்களுடைய குழந்தையைப் பற்றிய தகவல்களை அணுகுவதைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு Department of Education, Skills and Employment's Guide to Accessing and Correcting Your Personal Information எனும் வலைத்தலப் பக்கத்தினைப் பாருங்கள்.

## AEDC கணக்கெடுப்பு இதற்கு முன்பு செய்யப்பட்டிருக்கிறதா?

2004 மற்றும் 2008-ஆம் அண்டுகளில் ஆஸ்திரேலியாவெங்கும் உள்ள 60 சமூகங்களில் AEDC கணக்கெடுப்பு முயற்சித்துப் பார்க்கப்பட்டது. ஒவ்வொரு மாநிலம் மற்றும் எல்லைப் பகுதியிலிருந்தும் (நார்தர்ன் டெரிடோரி நீங்கலாக) பாடசாலைகளில் இருந்து (அரச மற்றும் அரசு-சாரா பாடசாலைகள் இரண்டும்) 56,752 குழந்தைகளும் 2,157 ஆசிரியர்களும் 1,012 பாடசாலைகளும் இத் திட்டத்தில் ஈடுபாடுகொண்டனர்.

2009-ஆம் ஆண்டில் AEDC கணக்கெடுப்பானது தேசிய அளவில் முதல் முறையாக நடத்தப்பட்டது (இதற்கு முன்பாக இது 'ஆஸ்திரேலிய ஆரம்பகாலக் குழந்தைப்பருவ வளர்ச்சிக் குறியீடு' (Australian Early Development Index (AEDI) என அழைக்கப்பட்டது) ஆஸ்திரேலியாவிலுள்ள குழந்தைகளின் ஆரம்பகாலக் குழந்தைப்பருவ வளர்ச்சிப் பலாபலன்களின் 'விரைவுச்-சுருக்கம்' (snapshot) ஒன்றை இது அளித்தது.

அச் சமயத்திலிருந்து, தேசிய அளவில் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை AEDC கணக்கெடுப்பு நடத்தப்பட்டுவருகிறது (2012, 2015, 2018). ஒவ்வொரு திரட்டலிலும் தகுதி பெறும் குழந்தைகள் உள்ள 95 சதவீத்திற்கும் அதிகமான பாடசாலைகள் பங்குபற்றின.

## ‘மக்கள் தொகை அளவை’ (population measure) ஒன்று பயன்படுத்தப்படுவது ஏன்?

மக்கள் தொகை அல்லது சமூக சனக்-குழுக்கள் மீது ‘சமூக-மக்கள் அளவை’ (population measure) ஒன்று கவனம் செலுத்துகிறது. ஒரு முழு சமூகத்தினரிடையேயான ஆரம்பகாலக் குழந்தைப்பருவ வளர்ச்சியை இது ஆய்வு செய்கிறது. தனிப்பட்ட குழந்தைகள் மீது செலுத்தப்படும் கவனக்குவிவை சமூகத்திலுள்ள அனைத்துக் குழந்தைகள் மீதும் செலுத்துவதாக மாற்றியமைப்பது இன்னும் அதிகக் குழந்தைகளுக்கு பெரும் வித்தியாசம் ஒன்றை ஏற்படுத்துகிறது.

உகந்த அளவிலான ஆரம்பகாலக் குழந்தைப்பருவ வளர்ச்சிக்கு உதவுவதற்கான முயற்சிகளைத் திட்டமிடவும், மதிப்பிடவும் AEDC கணக்குடுப்புத் தரவுகளை சமூகத்தினர், பாடசாலைகள், கொள்கை உருவாக்குனர்கள், ஆரம்பகாலக் குழந்தைப்பருவக் கல்வியாளர்கள், மற்றும் சுகாதார சேவைகள், உள்ளூர் நகரவைகள் மற்றும் அரசுகள் ஆகியோர் மற்ற (மாநில மற்றும் தேசிய புள்ளி-விவரங்கள் போன்ற) மூலவளங்களுடன் இணைவாகப் பயன்படுத்தலாம்.

## AEDC-யின் பலன்கள் யாவை?

சிறு குழந்தைகளுக்கும், குழந்தைகளுக்கும் அவர்களது ஆரம்பகால வருடங்களில் ஏற்படும் அனுபவங்கள் மற்றும் தொடர்புறவுகளாவன அவர்களது எதிர்கால வளர்ச்சியை வலுவாகப் பாதிக்கும் என்று ஆய்வுகள் காண்பிக்கின்றன. ஏற்ற சேவைகள், மூலவளங்கள் மற்றும் ஆதரவுதவிகளைக் குழந்தைகளுக்கு அவர்களது ஆரம்பகால வருடங்களில் அளிப்பது அவர்களுக்கும் சமூகத்தினருக்கும் நீண்டகாலப் பலன்களைக் கொணரும்.

AEDC கணக்கெடுப்பில் தாம் பங்குபற்றுவது தனிப்பட்ட குழந்தைகளுக்கும், வகுப்பிலுள்ள ஒட்டுமொத்தக் குழந்தைகளுக்குமான தேவைகளைப் பற்றிய தமது விழிப்புணர்வை மேம்படுத்தியதாக ஆஸ்திரேலிய ஆசிரியர்கள் தெரிவித்தனர். பாடசாலைக் கல்விக்குக் குழந்தைகள் முன்னேறிச் செல்வதிலும், வகுப்பறைப் பாடங்களைத் திட்டமிடவும் AEDC கணக்கெடுப்பைப் பூர்த்தி செய்வது உதவியாக இருந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

இளம் குழந்தைகள் மற்றும்  அவர்களுடைய குடும்பங்கள் ஆகியோரின் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுவதற்குத் தேவைப்படும் தகவல்கள் அரசாங்கங்களுக்கும், சமூகத்தினருக்கும் தொடர்ந்து கிடைத்துக்கொண்டிருக்கும் என்பதை AEDC -கணக்கெடுப்பிற்குத் தொடர்ந்து அளிக்கப்படும் நிதியுதவிகள் உறுதிப்படுத்துகின்றன. கல்வித்துறை, சுகாதாரத் துறை மற்றும் சமூக சேவைகள் ஆகியவற்றிற்கிடையே ஏற்கனவே உருவாகியுள்ள கூட்டு-முயற்சிகள் ஏற்கனவே துவங்கியுள்ள பணிகளை அடிப்படையாகக் கொண்டு மேலும் தொடர்ந்து வளர்ச்சியடைய இயலும்.

முந்தைய தரவுத் திரட்டல்களிலிருந்து பெறப்பட்ட முடிவுகள் இளம் குழந்தைகளுக்கும், குடும்பங்களுக்கும் உதவுவதற்காகப் பல வழிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன:

- புதிய விளையாட்டு மைதானங்கள் மற்றும் பிள்ளை-வளர்ப்பு சேவைகள் ஆகியவற்றை சமூகத்தினர் துவங்கிவருகின்றனர்
- புதிய எழுத்தறிவுத் திட்டங்களின் மூலமாக மாணவ-மாணவியரது செயல்திறம் மேம்பட்டிருப்பதைப் பாடசாலைகள் காண்கின்றன.
- குழந்தைகளுக்காக இன்னும் சிறந்த கொள்கைகளை உருவாக்க அரசுகள் இந்தத் தரவுகளை ஆதாரமாகப் பயன்படுத்துகின்றன.

பாடசாலைகளாலும், சமூகங்களாலும் AEDC முடிவுகள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதற்கான உதாரணங்களைக் காண AEDC வலைத்தலங்களிலுள்ள school stories மற்றும் community stories ஆகியவற்றைப் பாருங்கள்.